# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| | | |
|---|---|---|
| தரம் : 06 | கணிதம்<br>பெயர் / சுட்டெண் : ............................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |

## பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.


01. ஒரு பேனாவின் விலை ரூபா 10 எனின், 4 பேனாவின் விலை யாது?

02. 87524 என்ற எண்ணில் இலக்கம் 7 குறிக்கும் இடப்பெறுமானம் யாது?

03. பி.ப. 1.30 இற்கு புறப்பட்ட புகைவண்டி குறித்த தூரத்தை கடப்பதற்கு 3 மணித்தியாலம் எடுத்தது. பிரயாண முடிவில் புகைவண்டியில் உள்ள மணிக்கூடு காட்டும் நேரத்தை சர்வதேச நியம முறையில் எழுதுக.

04. 46327 என்னும் எண்ணை சொற்களில் எழுதுக.

05.




தரப்பட்டுள்ள உருவிலே வட்டத்தின் மீதுள்ள எழுத்துக்கள் யாவை?


Education கல்வி அடியாபன

06. 0, –4, 2, –2 என்ற எண்ணை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

07. $\frac{3}{4} = \frac{\square}{8}$ வெற்றுக் கூட்டிற்குள் வரவேண்டிய எண்ணை எழுதுக.

08. மூன்று நேர்கோட்டுத் துண்டங்களினால் ஆன மூடிய தள உருவை எவ்வாறு அழைப்பார்?

09.




எண்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எண்ணை எழுதுக.

10. $2\ell\ 50m\ell$ என்பதை மில்லிலீற்றரில் தருக.

11. 2.38, 2.5 இவ் இரு எண்களிலும் பெரிய எண் எது?


12. ஒழுங்கான நான்முகிற்கு எத்தனை விளிம்புகள் உண்டு?



kalvi.lk

13. $\frac{2}{5}$ ஐ தசம எண்ணாக மாற்றுக.

14. ரூபனின் பிறந்த தினம் 07 ஆம் திகதி ஆடி மாதம் 2000 ஆம் ஆண்டு ஆகும். இதனை சர்வதேச நியம முறையில் எழுதுக.

15. 


தரப்பட்ட எண் கூட்டத்திற்கு பொருத்தமான பெயரை எழுதுக.

16. இருநூற்றுநான்கு மில்லியன் ஏழாயிரத்து எண்ணூறு என்பதை இலக்கத்தில் எழுதுக.

17. வகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை கிட்டிய பத்தின் மடங்கிற்கு மட்டந் தட்டும் போது 40 ஆகும். அவ் வகுப்பில் இருக்கக் கூடிய மாணவர்களின்

1) குறைந்த எண்ணிக்கை யாது?

2) கூடிய எண்ணிக்கை யாது?

18. சுவர் ஒன்றின் நிலைக்குத்து தன்மையை அறிந்து கொள்வதற்கு பயன்படும் உபகரணம் எது?

19. $\frac{1}{2}$ ஐ விடச் சிறிய பின்னங்கள் இரண்டை எழுதுக.

20. எண்ணொன்றை வலயங்களாக வேறுபடுத்தி எழுதும் போது எண் வலயம் ஒன்றில் இருக்கக் கூடிய இலக்கங்களின் மிகக் கூடிய எண்ணிக்கை யாது?

Education கல்வி அධ්‍යාපන

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட எவையேனும் ஐந்து வினாக்களிற்கு விடை தருக.**

01. 1) நீள அளவீடு கருவிகளில் மீற்றர்கோல், நாதச்சில்லு என்பன அடங்கும். இவற்றை விட வேறு இரண்டு உபகரணங்களை குறிப்பிடுக.

2) மீற்றர்கோலில் உள்ள மிகவும் சிறிய இரண்டு கோடுகளிற்கு இடைப்பட்ட தூரம் யாது?

3) பாடசாலை கட்டடத்தின் நீளத்தையும், மின்கம்பங்களிற்கு இடைப்பட்ட தூரத்தையும் அளக்க பயன்படும் இரண்டு உபகரணங்களைக் குறிப்பிடுக.

3) ரூபா 5 நாணயம் ஒன்றின் தடிப்பு 2mm எனின், இவ்வாறான 15 நாணயங்களின் தடிப்பினை சென்ரிமீற்றரில் தருக.

5) குறித்த தூரம் ஒன்றை நாதச்சில்லினால் அளக்கும் போது இருபது தடவை ஒலி எழுப்பியது எனின், அளக்கப்பட்ட தூரம் யாது?

6) பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| | அளக்க வேண்டியவை | பொருத்தமான அலகு | பொருத்தமான உபகரணம் |
|---|---|---|---|
| a. | புத்தகத்தின் தடிப்பு | .......................... | .................................. |
| b. | ஆசிரியர் மேசையின் உயரம் | .......................... | .................................. |

7) மாணவன் ஒருவன் குண்டெறிந்த தூரம் 8.45m எனின், இதனை சென்ரிமீற்றரில் தருக.

(2 + 2 + 2 + 2 + 2 + 4 + 2 = 16 புள்ளிகள்)



kalvi.lk

02. 1) பின்வரும் பின்னங்களை வகை குறிப்பதற்கு உருக்கள் வரைந்து நிழற்றுக.

a) $\frac{3}{4}$ b) $\frac{3}{10}$ ( 1 + 1 = 02 புள்ளிகள்)

2) சுருக்குக.

a) $\frac{1}{5} + \frac{4}{15}$ b) $\frac{2}{3} - \frac{9}{21}$ (2 + 2 = 04 புள்ளிகள்)

3) குமரன் தனது மாதச் சம்பளத்தில் $\frac{1}{2}$ பங்கை உணவிற்காகவும் $\frac{1}{6}$ பங்கை உடைக்காகவும் $\frac{1}{12}$ பங்கை போக்குவரத்திற்கும் செலவு செய்தார்.

a) கூடிய தொகை பணத்தை எதற்காக செலவு செய்தார்?
b) குறைவான தொகையை எதற்காக செலவு செய்தார்?
c) கூடிய தொகை பணச் செலவிற்கும் குறைந்த தொகை பணச் செலவிற்கும் இடையில் உள்ள வித்தியாசம் முழுவதன் என்ன பங்காகும்?

(1 + 1 + 3 = 05 புள்ளிகள்)

03. 1) 2, 4, 6, 8, .......... , .......... என்ற எண் கோலத்தில்

a) அடுத்துவரும் இரு எண்களை எழுதுக.
b) இது எவ் எண் கோலமாகும்?

(1 + 1 = 02 புள்ளிகள்)

2) ஆறாவது ஒற்றை எண் எது? (02 புள்ளிகள்)

3) 1, 4, 9, 16, .................. என்பது ஓர் எண் கோலமாகும்.

a) இக் கோலத்தில் 64 எத்தனையாவது உறுப்பாகும்?
b) 50 இக் கோலத்தின் உறுப்பாகுமா? காரணம் தருக.


(1 + 1 + 1 = 03 புள்ளிகள்)

4) 1, 3, 6, 10, ................ என்ற எண் கோலம் முக்கோணி எண் கோலமாகும்.

a) இக் கோலத்தின் 8 ஆவது உறுப்பை
b) 55 இக் கோலத்தில் எத்தனையாம் உறுப்பாகும்?

(2 + 2 = 04 புள்ளிகள்)

04. அ)




1) வீட்டிற்கு மேற்கே அமைந்திருப்பது எது?
2) தபாற்கந்தோரிற்கு தென்கிழக்கே உள்ள இரு நிலையங்களைத் தருக.

( 2 + 2 = 04 புள்ளிகள்)



kalvi.lk

ஆ) படை வீரர் ஒருவர் பயிற்சியின் போது நீர்வீழ்ச்சி ஒன்றின் அருகில் நிறுத்தப்பட்டு பின்வரும் அறிவுறுத்தலிற்கு ஏற்ப பயிற்சியை நிறைவு செய்தார்.

1) நீர்வீழ்ச்சியின் அருகில் இருந்து 2km தூரம் வடக்கு திசையை நோக்கி சென்று குகை ஒன்றை காண்பீர்.

2) குகையில் இருந்து மேற்கு திசையை நோக்கி 2km தூரம் சென்று பயிற்சி முகாமை அடைவீர்.

இவ் அறிவுறுத்தலிற்கு ஏற்ப படை வீரர் செல்லும் பாதையைக் காட்டும் பருமட்டான வரிப்படத்தை வரைந்து உரிய இடங்களையும் தூரங்களையும் குறிக்க.
(1 + 2 = 03 புள்ளிகள்)

3) நீர் வரைந்த வரிப்படத்தில் பயிற்சி முகாமானது நீர்வீழ்ச்சியில் இருந்து எத்திசையில் உள்ளது? (02 புள்ளிகள்)

4) நீர்வீழ்ச்சியில் இருந்து குகைக்கான நேர்கோட்டிற்கும் நீர்வீழ்ச்சியில் இருந்து முகாமிற்கான நேர்கோட்டிற்கும் இடைப்பட்ட கோணம் எவ்வகையானது?
(02 புள்ளிகள்)

05. 1) 9 இன் காரணிகளில் ஒரு காரணி 3 ஆகும். மற்றைய காரணிகளை எழுதுக. (02 புள்ளிகள்)

2) வகுத்தல் முறை மூலம் அல்லது வேறு விதமாகவோ 24 இன் எல்லா காரணிகளையும் காண்க.
(02 புள்ளிகள்)

3) 2, 3 எனும் எண்களின் மடங்காக அமையும் ஓர் இலக்க எண் எது? ( 01 புள்ளி)

4) 100, 212, 425, 220, 108, 155
மேற்படி எண்களில் 5 ஆலும், 2 ஆலும் வகுபடும் தன்மை பற்றி ஆராயும் போது

a) 5 ஆல் வகுபடும் எண்களை எழுதுக. (02 புள்ளிகள்)

b) 2 ஆல் வகுபடும் எண்களை எழுதுக. ( 02 புள்ளிகள்)

c) 5 ஆலும், 2 ஆலும் வகுபடும் எண்களை எழுதுக. (02 புள்ளிகள்)

06. 1) a) பெருக்குக

$$\begin{array}{r} 1225 \\ \times \quad 75 \\ \hline \\ \hline \end{array}$$

b) வகுக்குக

54060 ÷ 15

( 2 + 2 = 04 புள்ளிகள்)

2) ஒருவர் பிரயாணத்தில் ஒரு பகுதியை பேரூந்தில் செல்வதற்கு ஒரு மணித்தியாலம் 55 நிமிடங்கள் எடுத்தது. மீதி தூரத்தை நடந்து செல்வதற்கு 35 நிமிடங்கள் எடுத்தது எனின், பிரயாணத்திற்கு எடுத்த மொத்த காலத்தைக் காண்க. (02 புள்ளிகள்)

3) மின் உற்பத்திற்கான நீர்த் தேக்கத்தில் 0.8 பங்கு நீர் உள்ளது. அதில் 0.15 பங்கு நீர் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டது. இப்போது நீர் தேக்கத்தில் எஞ்சியுள்ள நீர் என்ன பங்கு எனக் காண்க. ( 02 புள்ளிகள்)

4) காணியொன்றின் நீளம் 20m 75cm. அதன் அகலம் 12m 60cm ஆகும். அக் காணியின் சுற்றளவு யாது? ( 03 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457